தமிழ் மொழி

# ஒஸ்லோவின் பாடசாலைகளிற்கு நல்வரவு

முதலாவது பாடசாலை நாள் பிள்ளைக்கும் குடும்பத்திற்கும் வாழ்வில் ஓர் முக்கியமான தினமாகும். பிள்ளைக்கு இது ஓர் நல்ல ஆரம்பமாக அமைவதற்கான பொறுப்பை பெற்றோரும் பாடசாலையும் சேர்ந்து கொண்டுள்ளது. மாணவர்களும் ஆசிரியர்களும் திருப்தி கொள்ளும் வகையில் பள்ளி தொடங்கும் பிள்ளை ஒன்றின் பாதுகாவலர் என்ற ரீதியில் நீங்கள் மும்முரமாக பங்களிப்பீர்கள் என நாம் எதிர்பார்க்கிறோம். உங்களது பிள்ளை பாடசாலை ஆரம்பத்தை நல்ல முறையில் அனுபவித்து கல்வி ஆர்வத்தை பெறும் வகையில் நாம் எம்மால் இயன்ற அளவு செயற்படுவோம்.



## எல்லா பிள்ளைகளுக்கும் கல்வி உரிமை உண்டு

**பாதுகாப்பான அத்தோடு நல்ல ஓர் பாடசாலைச் சூழல்**

பாடசாலையில் ஓர் நல்ல நிலையை கொண்டிருப்பதற்கு அனைத்து மாணவர்களுக்கும் உரிமை உண்டு. பாதுகாப்பான ஓர் நல்ல பாடசாலை சூழ்நிலை ஆரோக்கியம், விருப்பு அத்தோடு கல்வி என்பவற்றை மேம்படுத்தும். பாடசாலை அத்தோடு ஓய்வுநேரப்பள்ளி ஆகியவற்றில் பணியாற்றுபவர்கள் மாணவர்களின் நிலை எவ்வாறு உள்ளது என்பதை தொடர்ந்து கவனிக்க வேண்டும். உங்களது பிள்ளை அல்லது உங்களுக்கு தெரிந்தவர்கள் யாருக்காவது இழிவுபடுத்தல் அல்லது கேலி செய்தல் போன்றவை இடம் பெற்றால் இதை நீங்கள் பாடசாலைக்கு அறிவிக்க வேண்டும் என நாம் எதிர்பார்கிறோம்.

**கல்விக்கான உரிமையும் கடமையும்**

நோர்வே நாட்டில் வதிக்கும் பிள்ளைகள் அனைவருக்கும் பத்தாம் வகுப்பு வரையிலான கல்வி ஓர் உரிமை அத்தோடு கடமையும் ஆகும். பிள்ளைக்கு இந்த கல்வி கிடைப்பதற்கான பொறுப்பு பாதுகாவலர்களாகிய உங்களிடம் உள்ளது.

**அயல் பாடசாலை அத்தோடு பாடசாலை மாறுதல்**

மாணவருக்கு எந்த பாடசாலையில் இடம் கிடைப்பது என்பது அவர் பதியப்பட்டிருக்கும் வதிவிட முகவரியை கொண்டு நிர்ணயிக்கப்படும். பாடசாலை மாற்றுவதாயின் மாற விரும்பும் பாடசாலைக்கு நீங்கள் ஓர் மின்னஞ்சல் அல்லது தபால் அனுப்ப வேண்டும்.

**கல்வி ஆண்டு**

ஓர் கல்வி ஆண்டில் மாணவர்கள் 190 நாட்கள் பாடசாலை செல்ல வேண்டும். தினந்தோறும் மாணவர் பாடசாலைக்கு சமூகம் அளிப்பதை பாதுகாவலர் ஆகிய நீங்கள் உறுதி செய்ய வேண்டும்.

**சுகயீன ஓய்வு**

மாணவர் ஒருவர் சுகயீனம் அடைந்த காரணத்தால் சமூகம் அளிக்க முடியாவிடில் இதை நீங்கள் பாடசாலைக்கு அறிவிக்க வேண்டும். சுகயீன ஓய்வு மூன்று நாட்களுக்கு மேல் நீடிக்குமாயின் இதை மருத்துவரின் சான்றிதழ் ஊடாக நிரூபிக்க வேண்டும். நீண்ட கால சுகயீன ஓய்வின் போது வீட்டில் கல்வி ஊட்டுவது பொருத்தமானதா என்பதை பாடசாலையும் பாதுகாவலர்களும் சேர்ந்து கணிப்பீடு செய்ய வேண்டும்.

**முன் அனுமதியுடன் ஓய்வு**

பாசாலையில் இருந்து முன் அனுமதியுடன் ஓய்வு பெறும் விடயத்தில் ஒஸ்லோவின் பாடசாலைகள் ஓர் பிரத்தியேக விதிமுறைகளை கொண்டுள்ளன. முக்கிய விதிமுறையாக உதாரணமாக விடுமுறைக்காக பயிற்சி பாசறைகளுக்காக அல்லது பரீட்சை தினங்களில் மாணவர்களுக்கு முன் அனுமதியோடு ஓய்வு வழங்கப்படுவது இல்லை. 14 நாட்களுக்கு மேலாக மாணவர் பாடசாலையில் சமூகம் அளிக்காவிடில் அவர் பாடசாலையில் இருந்து நீக்கப்படுவார்.

**ஒழுக்க விதிமுறைகள்**

ஒழுக்கம் மற்றும் நடத்தை ஆகியவற்றுக்கான விதிமுறைகள்[1] ஒஸ்லோவின் பாடசாலைகளிற்கு பொதுவாக உள்ளன. ஒவ்வொரு பாடசாலையும் மேலதிகமான விதிமுறைகளை தீர்மானித்துக்கொள்ளலாம். மாணவர்கள் விதிமுறைகளை மீறும் தருணத்தில் எவ்வகையான எதிர்விளைவுகளை பாடசாலை வழங்கும் என்பதும் இவ்விதிமுறைகளில் குறிக்கப்பட்டிருக்கும்.

**பெற்றோர் கூட்டம்**

மாணவனின் விருத்தி மற்றும் பிரியம் என்பவற்றிற்கு பாடசாலைக்கும் குடும்பத்திற்கும் இடையில் இருக்கும் ஓர் நல்ல ஒத்துழைப்பு முக்கியமானது பெற்றோர் கூட்டத்தின் போது செயற்பாட்டு வழிமுறைகள் அத்தோடு கல்வியை அமைத்துக்கொள்ளும் விதம் என்பவை பற்றி பாடசாலை அறிவிக்கும். இக்கூட்டங்களில் வகுப்பின் அத்தோடு பாடசாலையின் சூழ்நிலை ஆகியவை கலந்தாலோசிக்கப்படுவதோடு தேவையான விடயங்களை பற்றியும் பெற்றோர் வினாவலாம்.

**பாடசாலை மற்றும் பல் மருத்துவ சேவை**

பாதுகாவலர்களும் மாணவர்களும் தொடர்பு கொள்ளக்கூடிய வகையில் பாடசாலையில் சுகாதார பரிசோதகர் சேவை உண்டு. பாடசாலையின் சுகாதார சேவை மாணவர்களுக்கு தடுப்பூசி மற்றும் மருத்துவ ஆலோசனைகள் என்பவற்றை இலவசமாக வழங்கும். பாடசாலை மாணவர்கள் தாம் பதினெட்டு வயதை அடையும் வரை கட்டணம் இன்றி பல் வைத்தியத்தை பெறுவதற்கான உரிமையை கொண்டுள்ளனர். பல் ஆரோக்கிய பரிசோதனைக்கு அனைவரும் அழைக்கப்படுவர். பொதுசன பல் வைத்திய ஏற்பாட்டை பயன்படுத்த விரும்பாதவர்கள் செலவுகளை தாமாகவே செலுத்திக்கொள்ள வேண்டும்.



# மாணவர்கள் எவற்றை எவ்வாறு கற்றுக்கொள்வார்கள்?

**பாடங்களும் திறன்களும்**

வாசித்தல், எழுதுதல் அத்தோடு கணிப்பிடுதல் போன்றவற்றில் அடிப்படை திறனை பிள்ளைகள் ஆரம்ப கல்வி ஆண்டுகளில் கற்றுக்கொள்வார்கள். அத்தோடு ஒத்துழைப்பு, ஒருவரை ஒருவர் செவிமடுத்தல், சிந்தனைகள் அத்தோடு கருத்துக்கள் என்பவற்றை வெளிக்காட்டுதல் மற்றும் ஓர் நல்ல நண்பனாக இருத்தல் என்பவற்றையும் இவர்கள் கற்றுக்கொள்வார்கள்.

## அடிப்படைத் திறன்கள்

- ★ வாசிக்கும் இயல்பு
- ★ எழுதும் இயல்பு
- ★ கணிப்பிடும் இயல்பு
- ★ டிஜிட்டல் உபகரணங்களை பயன்படுத்தும் இயல்பு
- ★ பேச்சு மூலமாக தனது கருத்தை வெளிக்காட்டும் இயல்பு

### தரம் 1. மற்றும் 2. இன் பாடங்கள்

- ★ நோர்வே மொழி
- ★ கணிதம்
- ★ விஞ்ஞானம்
- ★ ஆங்கில மொழி
- ★ சமூகக்கல்வி
- ★ கலையும் கைப்பணியும்
- ★ இசைக் கல்வி
- ★ உடற்பயிற்சி
- ★ கிறிஸ்தவம், மதம், ஆன்மீகம், நெறிமுறைகள்(KRLE)




**பொருத்தமாக்கப்பட்ட கல்வி**

அனைத்து மாணவர்களும் அவர்கள் கொண்டுள்ள திறன் அத்தோடு முன்நிபந்தனைகள் என்பவற்றிற்கு பொருந்தத்தக்க வகையிலான கல்வியை பெறுவார்கள். மாணவர்களுக்கு வேறுபட்ட பல்வகையான விதங்களில் கல்வி ஊட்டல் வழங்கப்படும் - முழு வகுப்புடன் ஒன்றிணைத்து, சிறிய குழுக்கலாக அத்தோடு வகுப்பிற்கு புறம்பாக, ஆசிரியர் உடன் தனிமையாக அல்லது வகுப்புடன் சுற்றுலா செல்வது போன்ற வகையில். மாணவரின் வெவ்வேறு தேவைகளுக்கு ஏற்ப வகையில் பொருந்தத் தக்கவாறு கற்பித்தல் அமைத்தாலும் கூட தாம் ஓர் மாணவர் சமூகத்தில் பங்கு கொண்டவர் என்பதை மாணவர் அனுபவிக்க வேண்டும்.

**சிறப்பு கல்வி**

சாதாரண கல்வியூட்டல் ஊடாக பலனை பெற முடியாத மாணவர்களுக்கு சிறப்புக் கல்வி பெறும் உரிமை உண்டு. மாணவருக்கு சிறப்புக் கல்வி அவசியமா என்பதை பாடசாலை கணிப்பீடு செய்து அதன் பின்னர் மாணவரை நிபுணத்துவ கணிப்பீட்டிற்காக போதனா உளவியல் சேவையிடம் (PPT) பதிவு செய்யும்.

**சிறுபாண்மை மொழி பின்னணியைக் கொண்ட மாணவர்கள்**

நோர்வேஜிய அல்லது சாமிய மொழியைத் தவிர வேறு ஓர் தாய் மொழியை கொண்ட மாணவர்கள் கல்வியூட்டலை புரிந்துகொள்ளும் அளவிற்கான நோர்வேஜிய மொழி அறிவை அடையும் வரையில் சிறப்பான நோர்வேஜிய மொழி கல்வியை பெறுவதற்கான உரிமையைக் கொண்டுள்ளார்கள். பாடசாலை ஆரம்பத்தின் போது மாணவர்கள் கணிப்பீடு செய்யப்படுகிறார்கள். இவர்களுக்கு வலுப்படுத்தப்பட்ட கல்வியூட்டல் இவர்களது வகுப்பில் அத்தோடு/அல்லது விசேட குழுக்களில் வழங்குவதற்கான சலுகை அளிக்கப்படும். அவசியம் இருந்தால் மாணவர்களுக்கு தாய்மொழி பயிற்சி அத்தோடு/அல்லது இருமொழியிலான கல்வியூட்டல் என்பவற்றிற்கான உரிமையும் உண்டு.

**மாணவர் மதிப்பீடு அத்தோடு அபிவிருத்தி பற்றிய உரையாடல்**

ஒவ்வொரு மாணவர்களினதும் பாடத்திறன் அத்தோடு சமூகபந்த திறன் விருத்தி என்பவற்றை பாடசாலை கவனிக்க வேண்டும். மாணவர்கள் எதில் திறமை கொண்டுள்ளார்கள் அதே சமயம் எவற்றில் அவர்கள் கூடுதல் அக்கறை காட்ட வேண்டும் என்பது பற்றி அவர்களுக்கு அறியப்படுத்தப்பட வேண்டும். அனைத்துப் பாடங்கள் அத்தோடு ஒழுக்கம் மற்றும் நடைமுறை என்பவை பற்றி அரை வருடத்திற்கு ஒருமுறை மாணவருக்கு தெரியப்படுத்த வேண்டும். இவ்வாறான அரை வருட கணிப்பீடு எழுத்து மூலமாக அல்லது/அத்தோடு வாய் மூலமாக வழங்குவதா என்பதை அதிபர் தீர்மானிப்பார். மாணவருக்கும் வகுப்பாசிரியருக்கும் இடையில் வருடத்தில் அதி குறைந்தபட்சம் இரண்டு தடவைகள் நடத்தப்படும் மாணவர் உரையாடல் ஊடாக அத்தோடு பெற்றோருடன் நடத்தப்படும் விருத்தி உரையாடல் ஊடாக இவ்வாறான அரை வருட கணிப்பீடு வழங்கப்படலாம்.

**நீச்சல்**

உடற்பயிற்சிப் பாடத்தின் ஒரு பகுதி நீச்சல் ஆகும், ஆனால் மாணவர்கள் நீரில் பழக்கத்தை ஏற்படுத்தி நீந்தும் அறிவை பெற்றுக்கொள்ளும் பொறுப்பு குடும்பத்திற்கும் பாடசாலைக்கும் பொதுவானதாகும். சிறு வயதில் இருந்தே நீரில் பயம் தெளியும் வகையில் நடந்துகொள்வது பிள்ளைகளுக்கு முக்கியமான ஒன்றாகும்.

## ஓய்வு நேர பாடசாலை (AKS)

ஆவணி 01 இல் ஆரம்பித்து, பாடசாலை நேரத்திற்கு முன்னரும் அதன் பின்னரும் வழங்கப்படும் ஓர் செயற்பாட்டு சலுகையே AKS ஆகும். பாடசாலை ஆரம்பிக்கும் அநேகமான மாணவர்களுக்கு AKS தான் பாடசாலை உடனான முதலாவது சந்திப்பு ஆகும். பாடசாலையின் ஒத்துழைப்புடன் விளையாட்டு மற்றும் கல்வி ஊடாக பிள்ளையின் கல்வித் திறன் அத்தோடு சமூக பந்த செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு AKS வழிவகுக்கின்றது. இடம் பதிவுசெய்வதற்கு இங்கு நீங்கள் விண்ணப்பிக்க வேண்டும்.